வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.05/2023

வழக்கு சாட்சி – PW –3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.பாலமுருகன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 07.10.2024.

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 03.39 மணி)

நான் தற்போது இராமநாதபுரம் வாலாந்தரவையில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முரளி என்பவரை தெரியும். அவர் எனது மச்சான். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 2, 3 வருடங்களுக்கு முன்பு வாலாந்தரவையில் ரோட்டில் சத்தம் கேட்டது. நானும் மற்றவர்களும் சென்றோம். அப்போது இரவு 8.00 மணி இருக்கும். யார் யாருக்கு காயம் ஏற்பட்டது என்று தெரியாது. அப்போது இருட்டாக இருந்தது. வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 02.04.2022ம் தேதி முரளி தன் நண்பர்களான நாகேந்திரன், கார்மேகம் ஆகியோர்களுடன் மாலை 3.00

மணியளவில் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே மது அருந்திவிட்டு முரளி அவரது அம்மா படத்தை கையில் பச்சை குத்தியதாகவும், அதற்கு நாகேந்திரன் பணம் கொடுத்ததாகவும், அப்போது எதிரி கார்மேகம் நாகேந்திரன் என்பவரிடம் பச்சை குத்த பணம் கேட்டதாகவும், அதில் தகராறு ஏற்பட்டதாகவும், பின்பு மூவரும் அம்மன் கோவிலுக்கு சென்றுவிட்டதாகவும், இரவு எதிரி கார்மேகம் முரளியின் போனிற்கு தொடர்பு கொண்டு வீட்டிற்கு அழைத்துதாகவும், இரவு 9.00 மணியளவில் முரளி எதிரியின் வீட்டிற்கு சென்றதாகவும், எதிரி கெட்ட வார்த்தையால் திட்டி மறைத்து வைத்திருந்த அரிவாளால் இ,த்தோடு செத்து தொலைடா என்று சொல்லி கழுத்தை நோக்கி வெட்டியதாகவும், அதை முரளி தடுத்ததில் அவரது வலது தோல்பட்டை, வலது மேல்கை, மணிக்கை ஆகிய இடங்களில் வெட்டுபட்டு காயம் ஏற்பட்டதாகவும், சம்பவம் குறித்து தனக்கு நேரடியாக தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக எதுவும் தெரியாது என உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–** இல்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.

வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.05/2023

வழக்கு சாட்சி – PW –4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.ரூபன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 07.10.2024.

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 03.47 மணி)

நான் தற்போது வாலாந்தரவையில் குடியிருந்து வருகிறேன். சா.ப.சாட்சி பூமிநாதன் என்பவரை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்தை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு கேணிக்கரை காவல் நிலையத்திற்கு சொந்த வேலையாக சென்றிருந்தபோது எழுதிய பேப்பரில் போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்று தெரியாது. படித்து பார்க்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க போட்டுக்கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரணையில் கடந்த 03.04.2022 ம் தேதி காலை 11.00 மணியளவில் கேணிக்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வாலாந்தரவை அம்மன்கோவில் தெருவில் உள்ள எதிரியின் வீட்டின் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகஜரில் நானும், பூமிநாதனும் சாட்சியாக உடனிருந்து கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக எதுவும் தெரியாது என உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–** இல்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.

வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.05/2023

வழக்கு சாட்சி – PW –5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.சரவணன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 07.10.2024.

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 03.52 மணி)

நான் தற்போது வாலாந்தரவையில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 முரளி, அ.சா.2 பூமிநாதன் என் உடன் பிறந்த சகோதரர். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 02.04.2022 ம் தேதி 03.00 மணியளவில் நான் இராமநாதபுரம் பாரதிநகரில் எனது வீட்டில் இருந்தேன். அப்போது என் தம்பி முரளி எனக்கு போன் செய்து நாகேந்திரனும், என் தம்பி முரளியும் பச்சை குத்தி கொண்டிருந்ததாகவும், பச்சை குத்தியதற்கு நாகேந்திரனிடம் ரூ.500/– கொடுத்ததாகவும், எதிரியும் நாகேந்திரனிடம் பச்சை குத்த பணம் கொடுக்க கேட்டு அசிங்கமாக பேசி, கெட்ட வார்த்தையால் திட்டியதாகவும் தகவல் சொன்னார். அங்கிருந்து கிளம்பிவிட்டதாகவும் சொன்னார். மீண்டும் மாலை 5.00 மணியளவில் என் அண்ணன் பூமிநாதன், முரளியும் போன் மூலம் கார்மேகம் முரளியை வெட்ட வந்ததாக எனக்கு தகவல் சொன்னார்.

பின்பு 9.00 மணியைபோல் இராமநாதபுரத்திலிருந்து வாலாந்தரவைக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது என் அண்ணன் பூமிநாதன் போன் செய்து எதிரி கார்மேகம் முரளியை வெட்டிவிட்டதாக சொன்னார். தகவல் தெரிந்தவுடன் சம்பவயிடமான எதிரி கார்மேகம் வீட்டிற்கு சென்றேன். என் தம்பி வலது கையில் வெட்டுபட்டு இரத்தக்காயத்துடன் இருந்தார். என்னுடைய TN 65 AA 1112 என்ற இருசக்கர வாகனத்தில் என் தம்பி முரளியை ஏற்றிக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். கேணிக்கரை போலீசார் வந்து என் தம்பியிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் நானும் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சியாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3**. என் தம்பி முரளியிடம் சம்பவம் குறித்து கேட்டபோது எதிரி கார்மேகம் பச்சை குத்தியது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு என்னை எதிரி வெட்டியதாக சொன்னார். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இரண்டு நாட்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டார். அதன் பின்பு இராமநாதபுரம் சசி ஆர்தோ மருத்துவமனையில் 20 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். கேணிக்கரை காவல் ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.

வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.05/2023

வழக்கு சாட்சி – PW –6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.பூமிநாதன் | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 07.10.2024.

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 04.04 மணி)

நான் தற்போது வாலாந்தரவை அண்ணாநகரில் குடியிருந்து வருகிறேன். இராமநாதபுரத்தில் பார் வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.4 ரூபன் எனது மச்சினன். கடந்த 03.04.2022 ம் தேதி சுமார் காலை 11.00 மணியளவில் நானும், ரூபனும் எதிரி கார்மேகம் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது கேணிக்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளர் வந்தார். கார்மேகமும், முரளியும் சண்டை போட்டு கொண்டது சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னுடன் ரூபன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள

முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **பார்வை மகஜர் அ.சா.ஆ.4**. கேணிக்கரை காவல் ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** : வழக்கறிஞர் ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

(ஒம்/−சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.